Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஆடு (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது — தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்.-சூஎ] யாழ்ப்பாணம்:- மன்மத வரு பங்குனி மீ ௩உ வெள்ளிக்கிழமை (16 MARCH. 1956) [இல-ருO]

# மாணவர் அரசியலில் இடுபடலாமா?

## இந்நாட்டுப்பொதுவுடைமையும் உருசிய பொதுவுடைமையும்

### மாணவருக்கும் பொதுவுடைமையினருக்கும் பண்டித நேருவின் அறிவுரை

பாரத சேவா சமாசத்தின் இளைஞர் சமாசப் பிரிவை கிராமபாத்தில் பண்டிதநேரு அவர்கள் ஆரம்பித்து வைத்தார். அத்தருணம் மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவதை அவர் வன்மையாகக் கண்டித்துப் பேசினர். கல்வியைக் கற்று உலகத்தின் சிக்கலான கருமங்களை விளங்கக்கூடிய ஆற்றலைப் பெற்றபின்பே அவர்கள் அரசியலில் இறங்கலாம் என்று அப்பொழுது கூறினர். அவருடைய பேச்சிற் சில பகுதிகளின் சாரம் கீழே தரப்படுகின்றது.

பொதுவான முறையில் எதையும் திருப்பித் திருப்பிச் சொல்வதால் ஆம் பயன் ஒன்றுமில்லை எதை எதைச்செய்யக்கூடாதென்பதை இலகுவாயறியலாம். ஆனால் நிச்சயமாக எதைச் செய்வதென்று தீர்மானிப்பது கடினமான காரியம். அடக்கமுடைமையாலும் அனுபவத்தாலுமே சிக்கலான கருமங்களைக் கையாளுந் திறன் எது என்று அறிகின்றோம்.

நாற்பது ஆண்டுகளுக்குமுன் உருசியாவில் நடந்த புரட்சி முறையில் தாங்களும் புரட்சி செய்வோராக இந்திய பொதுவுடைமைக் கட்சியினர் தம்மைக் கருதுகின்றனர். ஆனால் உலகம் மாறி இப்பொழுது அணுசக்திக் காலமாய் விட்டது. பேச்சளவில் நில்லாது ஆட்சி செய்ய வேண்டும் என்பதை உருசிய தலைவர்கள் அறிவார்கள். பழைய பல்லவிகளைப் பாடிக்கொண்டிருக்க அவர்களுக்கு முடியாது. ஆகையினாலே அவற்றை அவர்கள் கைவிட்டுவிட்டார்கள். ஆனால் இங்குள்ள பொதுவுடைமைக் கட்சியினர் அவற்றையே சொல்லுகின்றனர். சமசந்தர்ப்பமுள்ள வாழ்க்கை முறைமைச் சமாதான பாராளுமன்ற முறையால் அடையலாமென்று உருசியர்கள் இப்பொழுது நம்புகின்றனர். காலமாற்றத்துக்கேற்றவாறு தாங்கள் மாறக்கூடியவர்கள் என்பதை இதனால் அவர்கள் காட்டிவிட்டார்கள்.

சமசந்தர்ப்ப சமூகத்தை அமைக்கும் முயற்சியில் நாம் மக்களுடன் ஈடுபட வேண்டியிருக்கின்றது. 36 கோடி மக்களைக் கொண்டு இச்சமூகத்தை அமைக்க வேண்டியிருக்கின்றது. அணுசக்தி ஆயுதங்கள் ஒரு சங்கிலித் தொடரான மாற்றத்தை வாழ்க்கையிலும் சமூகத்திலும் உண்டு பண்ணிவிட்டன. உலகின் சிக்கலான பல கருமங்களை இந்நாட்டு இளைஞர்கள் உள்ளவாறு உணர வேண்டும்.

ஒரு சமூகம் முன்னேற வேண்டுமானால் அது சக்தி வாய்ந்ததாயிருக்க வேண்டும். சக்தியுடன் வாழும் ஒரு சாதியார் தங்கள் இலக்கியம், கலாசாரம், செயற்சித்தி ஆகியவற்றால் தங்கள் தன்மையைத் தெரியச் செய்கிறார்கள். இந்தியாவை ஒரு முன்னேற்றமடைந்த நாடாகச் செய்ய வேண்டுமானால் நாங்கள் உயிர்ப்பு மிகுந்த சக்தியுடையவர்களாயிருக்க வேண்டும். சக்திக்கு அறிகுறியாயுள்ளது எது? பழுதான யந்திரம் போல ஒரு பிற்போக்கான நாடு அதிக சத்தமுண்டாக்கும். நல்ல நிலையிலுள்ள யந்திரம் சத்தமின்றித் திடமாகச் செல்கின்றது. ஒரு சமூகம் உளதைரியமில்லாதிருப்பதையும் அதன் கருமங்கள் நல்லாய் நடைபெறவில்லை என்பதையும் சத்த மிகுந்த ஆர்ப்பாட்டங்கள் அறியத் தருகின்றன.

இளைஞர்கள் வீராவேசமுடையராயிருத்தல் வேண்டும் என்று புகட்டப்படுகின்றனர். ஆனால் ஊர்வலங்களும் குழப்பங்களும் வீராவேசமாக மாட்டா. இளைஞர் வீராவேசமுடையராயிருத்தல் வேண்டுமென்பது நூதனமாயிருக்கின்றது. எதற்காக அது வேண்டப்படுகின்றது. வீடுகள், பிறநிலையங்கள், ஆகியவற்றிற்கு நெருப்பு வைத்தல், புகையிரதங்களை மறித்தல் மக்களுக்கு அடித்தல் பாடிகாவலருடன் முட்டுப்பட்டுக்கொள்ளுதல் போன்றவைசெய்வதற்கா? இவற்றால் அவர்களுக்கு வரும் கதி என்னவாகும்? மாணவர் அரசியலில் தொடர்புடையவர்களாயிருக்கின்றார்கள் தான். அவர்களுடைய நோக்கம் வேண்டிய அறிவைப் பெற்று, கல்விகற்பது முடிந்தபின் வாழ்க்கையில் ஈடுபடுவதாகும். பள்ளிக்கூட மாணவ மாணவிகள் சிக்கலான காரியங்களைத் தீர்க்க முயலுதல் எவ்வாறாகும் என்று எனக்கு விளங்கவில்லை. அத்தொடர்புகளில் சாதாரண கேள்விகளுக்கே மறுமொழி சொல்ல மாட்டார்களாகையால் அவர்களுடைய முயற்சி பகிடிக்கூத்தாகவே முடியும்.

குழப்பங்களுண்டாக்கிப் பெருஞ் சிக்கல்களைத் தீர்க்க நினைத்தால் குறித்த சிக்கல்கள் தீராதிருப்பதுமல்லாமல் தங்களுக்கும் எவ்வித நன்மையுமின்றி நாட்டுக்குப் பெருந் தீமையே செய்வதாகும்.

### வடக்கு கிழக்கு மாகாணத் தேர்தல்

பங்குனி 28ந் திகதி செவ்வாய்க்கிழமை (10-4-56) வடக்கு கிழக்கு மாகாணத் தேர்தல் நடப்பதாகத் தீர் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

அரசியல் வலை:

# மூன்றுநாட்களில் முடிவடையும் சித்திரைத் தேர்தல்

## நாள் வைத்தலில் ஆட்சேபனை!

:0:

## தமிழ்பேசுந்தொகுதிகளின் முகூர்த்தம் பத்தாந் திகதி!!

நாள் வைப்பது எந்த வைபவத்திலும் நாலு பேரின் விருப்பத்தைக் கவனித்தே. அரசியலிலே பொதுவாகத் தேர்தல்நாள் நியமனம் சுபவேளை சுபமுகூர்த்தம் முதலியவற்றாற் கட்டுப்படுத்தப்படவியலாததொன்று என்பதுண்மையே.

முதல் அமைச்சருக்கு முதல்நாள். முக்கிய மாநகரத்திலும் முன் ஏற்பாடு. அது பொருத்தமானது தான்!

இரண்டு தொகுதியில் எடுத்த போட்டியைத் திரு. R G. சேனநாயக ஒரு நாளிலேதான் ஆடிப்பார்க்க வேண்டும். வீசைக்கும் கூழுக்கும் ஆசைப்பட்டால் வில்லங்கம் தோற்றுவது சகசமே.

தமிழ் பேசும் தொகுதிகளிலே தேர்தல் நடக்கும்பொழுது அறுபத்து நான்கு முடிபுகளை வாக்காளர்கள் அறிந்து விடுவார்கள். அபேட்சகர்கள் ஆதரவாளர்கள் அங்கும் இங்கும் ஓடி ஆடி வேலைசெய்து ஏனையோரை ஊக்கப்படுத்துவித்தலும் முடியாது. ஒரேநாள் ஒரே நேரம். போக்குவரத்து வசதிகள் அந்த அந்தத் தொகுதியிலேயே பயன்படுத்தப்படுதல் வேண்டும். இவ்வளவிலே புனிதமான முறையில் புதுமாதிரித் தேர்தல் ஒழுங்குகள் அமைந்துள்ளன.

எனினும் திருவாளர்கள் பண்டாரநாயகவும் தகநாயகவும் தங்கள் மனக்கவலையை அறிவித்திருக்கின்றார்கள்.

### கொடிப் போட்டி

கட்சிக் கொடிகளின் காட்சி கண்கொள்ளா திருக்கின்றது. வானளாவ வர்ணக் கொடிகள் பறந்த வண்ணமாயமைந்துள்ளன. ஆடற் பருந்தும் அருகுஊட்டும் பைங்கிளியும் போல அருகருகாக எதிர்க் கட்சிக் கொடிகள் ஆடிக்கொண்டிருப்பது ஒரு ஆறுதல். கொடியாடுவதும, கொடிகள் கட்டிநிற்போர் ஆடுவதும் தேர்தற் பொழுதுபோக்கு விநோதங்கள். இங்குமட்டுமல்ல ஏனைய நாடுகளிலும் என்பதுண்மையே.

விண்மீன் (நக்ஷத்திரம்), வீடு, குடை, ஆவிசக்கரம், திறப்பு; தராசு முதலியன மக்களுக்கு வேண்டியவைகளே. இவைகளைச் சின்னமாகக் கொண்டு அபேட்சகர்கள் வாக்குத் தேடல் இவற்றின் உபயோகங்களை நினைவூட்டக்கூடியதாயிருக்கும்.

### நிறப்பிரிவு பற்றி உயர் நீதிமன்றம்

அமெரிக்காவைச் சேர்ந்த வடகரோலினா சர்வகலாசாலையார் நிறப்பிரிவு காட்டியமை வழக்கொன்று உயர் நீதிமன்றத்துக்குக் கொண்டு போகப்பட்டது. கலாசாலைகள் சர்வ கலாசாலைகளில நிறப் பிரிவு இருக்கக்கூடாதென்று உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். மன்மத ஹூ பங்குனி மீ
௩ ௨ வெள்ளிக்கிழமை

## தேர்தல் ஒழுங்கு?

மதுபானம் தேர்தல் நடைபெறும் வாரத்தில் மணவினைக் கொண்டாட்டம் நடைபெறும் காலங்களிலும் பயன்படுத்தப்படுதற்கு அரசினரால் உத்தரவு அளிக்கப்படமாட்டாதென்று அறிவிப்பு வெளியாகியிருக்கின்றது. மருந்துக்கும் கூட மதுபானம் பெறமுடியாத வகையில் தேர்தல் ஒழுங்கு இருத்தல் அவசியம். ஆனால் அந்தத் தடை எப்பொழுது இருத்தல் வேண்டும் என்பதை அரசினர் ஆராயாதிருப்பது நூதனமே. நியமனப் பத்திரங்கள் கொடுபட்டநாள் முதலாகத் தேர்தல்நாள் ஈறாக உள்ள வேளைதான் தெரிவுக் காலமாகும். தேர்தல் நடக்கும் நாட்கள் மாத்திரம் 'கிரகண' தோஷ காலமாகாது. ஆகவே மதுபானம் வழங்கப்படாதென்ற தடை இப்பொழுதே விதிக்கப்படுதல் வேண்டும். பொது நலத்திற்காக உழைக்கின்றோம் என்று புகன்று வரும் தேர்தல் அபேட்சகர்கள் மதுபானத் தடையை அரசினரிடம் வாதாடியாவது விதிக்கச் செய்தல் அத்தியாவசியமாகின்றது. அவர்கள் கடமையுமாயுள்ளது.

ஆள்மாறி வாக்களிக்கும் அட்டூழியம விலக்கப்படுதற்கு தண்டனை விதிக்கப்படுதல்போல மதுபானத்தை தேர்தல் ஆயத்தங்களுக்குப் பயன்படுத்துவோருக்கும் குற்றம் போடுதல் வேண்டப்படுகின்றது. மக்கள் மனம் வாக்குக் காய சுத்தியுடன் நாட்டின் நலங்கருதி ஒரு நல்ல முடிபுக்கு வருவது இந்தத் தேர்தலில் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. எனவே மதுவென்பது மருந்துக்குத் தானும் பொதுத் தேர்தல் காலத்திற் பயன்படுத்தப்படாத வகையிலே தடை செய்யப்படுதல் சனநாயக முறையில முக்கியமான கொள்கையாயிருத்தல் வேண்டும்.

வாக்காளர்கள் மதுபானத்தால் மதியிழந்துவாக்கு மாறுவதுமன்றி தீய போக்குடையவர்களாய் நாடுமுற்றிலும் தீமையை உண்டு பண்ணக்கூடிய கலகங்களுக்கும் வித்திடுவோராக மாறுகின்றனர் என்பது ஒவ்வொரு தேர்தலிலும் உண்மையெனக் காணப்பட்டதொன்றல்லவா? இவ்வாறு நிலைமையை நன்கறிந்தும் அரசியற்றலைவர்கள் புனிதமான வழியில் வாக்காளர்கள் நடந்து கொள்வதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்விப்பதும் முயலாதிருப்பதென்னையோ?

# காஷ்மீர்ப் பேச்சுக்கு எதிர்ப்பு

## அமெரிக்க பிரித்தானிய விளக்கம்

## சபைஅமைத்தது பொதுவுடைமை எதிர்ப்புக்கே

பாக்கிஸ்தான் தலைநகராகிய கராச்சியில் தென்கிழக்கு ஆசிய உடன்படிக்கைச் சபைக்கூட்டம் நடைபெற்றது. காஷ்மீரைப் பற்றிய பேச்சு. அக்கூட்டத்தில் பேசுதல் முறையல்ல என்றுர் பிருத்தானிய பிரதிநிதி ஸ்ரீ செல்வின் உலோயிட். பாக்கிஸ்தான் பிடிவாதமாய் நின்றமையால் அதுபற்றிப் பேசப்பட்டது. அக்கூட்ட நிகழ்ச்சி அறிக்கையிலும் அது இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பங்குபற்றியநாடுகளுக்கு இந்திய அரசாங்கத்தார் அதுபற்றி தங்கள் எதிர்ப்பை அறிவித்துள்ளனர். எதிர்ப்பிற் குறிப்பிட்ட நியாயங்கள் இரண்டு. இதுபற்றி ஆராய்தற்கு இக்கூட்டத்துக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதும் உரிமை இல்லாது ஆராய்ந்தமை சட்டவிரோதமானது என்பதும் அந்நியாயங்களாகும். சட்டத்தின்படியும் உண்மையிலும் காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாகலின் தென்கிழக்கு ஆசிய உடன்படிக்கைச் சபைக்கு இதுபற்றி ஆராய எவ்வித உரிமையுமில்லை என்பது இந்தியாவால் தெளிவாகக் கூறப்பட்டது.

இந்நிலைமையில் அமெரிக்க பிருத்தானிய கொள்கை விளக்கப்படவேண்டியதாயிற்று. கூட்டம் பாகிஸ்தானில் நடந்தது. கூட்டத்துக்கு வந்தவர்களை உபசரித்தது பாக்கிஸ்தான். அப்படி உபசரித்த நாடு இதுபற்றிப் பேசவேண்டுமென்று வற்புறுத்தியது. அந்நாட்டின் விருப்பத்தைச் சிறிதும் ஆதரியாவிட்டால் நிகழ்ச்சிகள் விரும்பத்தக்க முறையில் நடக்க மாட்டா. கூட்டம் வேறுநாட்டில் நடத்தப்பட்டிருக்க வேண்டும். அல்லது பாக்கிஸ்தான் பங்குபற்றுமலிருக்கவும் விரும்பத்தகாத சூழலிலும் கூட்டம் நடத்த நேர்ந்திருக்கும்.

காஷ்பீர்ப் பிணக்குப்பற்றிச் சரிபிழை எதுவும் கூறப்படவில்லை என்பது அமெரிக்கா கொடுக்கும் விளக்கம். தென்கிழக்கு ஆசிய உடன்படிக்கைச் சபையின் எல்லைக்கு அப்பாற்பட்டது காஷ்மீர் என்று ஸ்ரீடல்லசே குறிப்பிட்டாராம். அன்றியும் இச்சபை அமைக்கப்பட்டது பொதுவுடைமை எதிர்ப்புக்கேயன்றி ஆசியாவின் உள்நாட்டுப் பிணக்குகளில் ஈடுபடுதற்கல்ல என்று மேலும் அவர் வற்புறுத்தினாராம்.

காஷ்மீர்பற்றி இச்சபையிற் பேசக்கூடாதென்ற பொழுது அதன் சரிபிழைகளைப்பற்றிப் பேசக்கூடாதென்பதே தமது மனத்திலிருந்ததாகவும் அதன்படி காஷ்மீர்ப் பிணக்கைப் பற்றிய சரிபிழை எதுவும் அங்கே பேசப்படவில்லை என்றும் பிரித்தானியப்பிரதிநிதி ஸ்ரீ செல்வன் உலோயிட் விளக்கம் கூறினாராம்.

பாக்கிஸ்தான் வானொலியிலே ஸ்ரீ செல்வின் உலோயிட் பேசியபொழுது இந்தியாவில் இந்தியாவைப் பாக்கிஸ்தான் தாக்கும் என்றும், பாக்கிஸ்தானில் பாக்கிஸ்தானை இந்தியா தாக்கும் என்னும் எண்ணமிருப்பதைத் தாம் அறிந்ததாகக் குறிப்பிட்டு, பிரித்தானிய சாம்பிராச்சியத்திலுள்ள இரு நாடுகள் தம்முட் சண்டை தொடுப்பதைத் தாம் நினைக்கமுடியாதென்றும் குறிப்பிட்டாராம்.

### வடமாகாண ஆசிரிய சங்கம்

#### பாட்டுப் பேச்சுப் போட்டிகள்

மேற்படி சங்கப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் 17, 24-3-56ல் நடைபெறும். ஆரம்ப போட்டியில் வெற்றி பெறுவோர் இறுதிப் போட்டிக்குரியராவர். சேர். இராமநாதன் முதலிய எட்டுப் பெருமக்களின் பேரால் பரிசில்கள வழங்கப்படும். 17ந் திகதி நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், 24ந் திகதி நிகழ்ச்சிகள் வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் நடைபெறும்.

### சர்வகலாசாலையார் வாக்களிக்க முடியாதாம்

வருகின்ற பொதுத் தேர்தலில சர்வகலாசாலை மாணவர் ஆசிரியர் ஆகியோர் வாக்களிக்க முடியாதாம். 3-4-56 தொடக்கம் 12-4.56 வரையும் அவர்களுக்குப் பரீட்சை நடப்பதால் 5, 7, 10 4-56 ல நடக்கும தேர்தல்களில் அவர்கள் பங்குபற்ற முடியாத நிலைமையே காரணமாகும்.

### ஒரு கிழமைக்குப் பூரண மதுஒழிப்பு

புத்த ஜயந்தியின்பொருட்டு, 23-5-56 தொடக்கம் 30-5-56 வரையும் எவ்வித மதுவும் விற்கக்கூடாதென்று அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கின்றது. ஆணையை மீறுவோர் மது விற்கும் உரிமையை இழப்பார்களாம.

### கொழும்பு விவேகானந்தசபை

---0---

### அகில இலங்கைச் சைவசமயபாடப் பரீட்சை

பரிசில் பெறுவோர் விபரம்:

#### ஆரம்ப பிரிவு

ஆண்: 1-ம் பரிசில்: சோ, சங்கரநாராயணன், வண்ணார்பண்ணை, வைத்தீஸ்வர வித்தியாலயம், 2ம பரிசில்: பொ. ஸ்ரீராகவன் இடைக்காடு இந்து ஆங்கில வித்தியாசாலை, 3ம் பரிசில் சு. கணேசலிங்கம் ஏழாலை விக்கினேஸ்வர வித்தியாசாலை,

பெண்: 1ம் பரிசில் கு. சந்திராதேவி, நெடுந்தீவு செல்லம்மா வித்தியாசாலை, 2ம் பரிசில் நா. இந்துமதி நயினாதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை 3ம பரிசில் க. செந்தமிழ்ச் செல்வி கேலணை சரஸ்வதி வித்தியாசாலை.

#### கீழ்ப் பிரிவு

1ம் பரிசில் சு. சரஸ்வதி வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி, 2ம பரிசில் இ. சரஸ்வதி வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம், 3ம பரிசில் வே. விமலாதேவி இளவாலை தெல். வடமேற்கு மெய்கண்டான் வித்தியாலயம்.

#### மத்திய பிரிவு

1ம் பரிசல் இ. கெங்காதரன் புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை, 2ம் பரிசில்: க. பாலசேகரம்பிள்ளை, யாழ்ப்பாணம் சேணியதெரு ஆங்கில வித்தியாசாலை, 2ம் பரிசில் அ. சோமாஸ்கந்த, தம்பசெட்டி, பருத்தித்துறை, 3ம் பரிசில் ஐ. பத்மாதேவி அனலைதீவு சதாசிவ ஆங்கிலவித்தியாசாலை.

#### மேற் பிரிவு

1ம் பரிசில்: வை. அன்னலட்சுமி இளவாலை தெல். வடமேற்கு மெய்கண்டான் வித்தியாலயம். 2ம் பரிசில் வி. கனகமணி பண்ணாகம் மெய்கண்டான்வித்தியாசாலை, 3ம்பரிசில் பொ. இராஜரத்தினம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. திருக்குறள் பரிசில் செ. சரஸ்வதி, கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை.

## கிளிநொச்சியில்

# தொழிற் கல்வி

வெறும் கல்வியால் பயனில்லை; தொழிலொடு சேர்ந்த கல்விமூலந்தான் நாட்டை முன்னேற்ற இயலும். இந்த இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு அகில இலங்கைக் காந்திய சேவாசங்கம் கிளிநொச்சியில் அரசினர் கொடுத்த ஐந்து ஏக்கர் காணியில் கமத்தொழிலைத்தொழிற் பயிற்சி நிறுவ முன்வந்துள்ளது. இதற்கான பூர்வாங்க கூட்டமொன்று அகில இலங்கைக் காந்திய சேவா சங்கக் கொழும்புக் கிளையின் ஆதரவில 11-3-56 ல் வெள்ளவத்தை சைவமங்கையர் கழகத்தில் கூடியது. கூட்டத்திற்கு இலங்கைச் சர்வகலாசாலைப் பேராசிரியர் திரு. கு. [illegible] தலைமை வகித்தார்.

மேற்படி நிலையம் பற்றி திருவாளர்கள் கலாநிதி பி. செல்வநாயகம், கலாநிதி குமாரன் ரத்தினம், வ இராஜேந்திரன் ஆகியவர்கள் பேசினர்கள்.

குறித்தநிலையத்திற்கான திட்டத்தை உருவாக்கவும், நிறைவேற்றவும் பின்வருபவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். திருவாளர்கள் நியாயதுரந்தரர் ச. சோமசுந்தரம், மேற்சபை அங்கத்தவர் அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அஸீஸ், மாணிக்க இடைக்காடர், கலாநிதி பி செல்வநாயகம், ப. சச்சிதானந்தம், கு. நேசையா சி. க. வேலாயுதபிள்ளை, ம. நல்லதம்பி, சோ. க. கந்தப்பிள்ளை. -கடித.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் திருநாள்

### அளவெட்டியில்

அளவெட்டி சதானந்த வித்தியாசாலை முத்தமிழ் மாணவ மன்றத்தினரால் 27-2-56-ல் ஆசிரியர் திரு. இ. முருகேசு அவர்கள் தலைமையில் விழா ஆரம்பமாயது. தலைவர் தமது தலைமைப் பேருரையில் வள்ளுவர் அகில உலகிற்கும் பொதுவானவரென்றும், அதனாலேயே அவர் அருளிச் செய்த தெய்வக் குறள் பொது நூலாக விளங்குகின்றதென்றும் குறிப்பிட்டார். பின்பு சைவப்புலவர் திரு. ச. சச்சிதானந்தம் ஆசிரியர் அவர்கள் "வையத்தை வாழ்வித்த வள்ளுவர்" என்ற விடயம் கொண்டு ஒரு சொற்பொழிவாற்றினர். எமது இலங்கைத் திருநாட்டில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் மொழிப் பிரச்சினை தீருவதற்குச் சிங்கள மக்கள் அவசியம் திருக்குறள் கற்கவேண்டுமெனவும், ஆதலின் திருக்குறளை சிங்களத்தில்மொழி பெயர்த்து இலவசமாகப் பொதுமக்களுக்கு அளித்து வள்ளுவத்தை அகில இலங்கை மக்களும் அறியும் வண்ணம் செய்தலே இன்றைய அரசாங்கமும் தமிழ்ச் சங்கங்களும் செய்யவேண்டிய தலையாயகடனெனவும் விரிவுரையில் அவர் குறிப்பிட்டார். பின்பு செல்விகள் மூ. விஜயலட்சுமி, ச. சரஸ்வதி என்போர் திருவள்ளுவர் பற்றிய பேச்சு, கட்டுரை வாசித்தல் என்பன நிகழ்த்தினர். செல்வன் க. நடராசா வள்ளுவர் நினைவுப் பாடல்கள் பாடினர்.

### வரணியில்

வரணிவடக்கு சனசமூக நிலையத்தில் திரு. வி. சிதம்பரநாதன் தலைமையில் திருவள்ளுவர் திருநாள் விழா நடைபெற்றது. பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை வள்ளுவனும் அரசியலும் என்ற பொருள் பற்றிப் பேசினர். பேச்சுப்போட்டியில் பரிசில்களும் வழங்கப்பட்டன.

### திருநெல்வேலியில்

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் திரு. இ. அப்பாத்துரை தலைமையில் திருவள்ளுவர் விழா நடைபெற்றது. வித்துவான் பொன். அ. கனகசபை, பண்டிதர் இ. நவரத்தினம் முதலிய அறிஞர்கள் சொற்பொழிவுகள் ஆற்றினர். திருவள்ளுவர் நினைவுப் பேச்சுப் போட்டிப் பரிசில்களும் வழங்கப்பெற்றன.

### பதுளையில்

3-3-56-ல் பதுளை சைவ பரிபாலன சங்க ஆதரவில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட்டது. அத்தருணம் பிரம்மஸ்ரீ மணி ஐயர் அவர்கள் வள்ளுவரைப்பற்றிச் சிறந்த சங்கீத உபந்நியாசம் ஒன்று செய்தார்.

### சிதம்பரத்தில்

சிதம்பரம் திருவள்ளுவர் படிப்பகத்தார் ஆதரவில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி ஏ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் திருவள்ளுவர் திருநாள்விழா நடைபெற்றது.

மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் திருவாளர்கள் அ. இராமசாமி எம். ஏ., கா. மீனாட்சிசுந்தரம் எம். ஏ., உ. பழனி எம். ஏ., முதலியோர் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

### மகாசங்காபிஷேகம்

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மன்மத ஹூ பங்குனி மீ (19-3-56) திங்கட்கிழமை காலை மகாசங்காபிஷேகமும், அன்றிரவு விசேட உற்சவமும் நடைபெறும்.

### தேர்தற் செலவு

நடக்கப் போகின்ற பொதுத்தேர்தற் கணக்கில் அரசாங்கத்துக்கு இரு கோடி ரூபாவுக்கு மேல் செலவாகுமாம். நாட்டுமக்களே வரிமூலமாயில் இதைப் பொறுக்க வேண்டியவர்களாகின்றார்கள்.

### இலங்கையில் அணுசக்தி ஆராய்ச்சி

அணுசக்தி ஆராய்ச்சிச் சபை ஒன்று இலங்கையில் அமைக்கப்படுமென்றும் அதன் தலைவராக பேராசிரியர் திரு ஏ. டபிள்யு மயில்வாகனம் கடமையாற்றுவாரென்றும் கூறப்படுகின்றது.

### வட இலங்கைச் சங்கீதசபை

யாழ்ப்பாணம்

சங்கீதப் பரீட்சைகள்—1956

மேற்படி சபையினரால் நடத்தப்படும் பரீட்சை யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் திருக்கோணமலையிலும் கண்டியிலும் நடைபெறும்.

சாத்திரப் பரீட்சை (Theory) சித்திரை மாதம் 28ந் திகதி மேற்குறிக்கப்பட்ட 4 இடங்களிலும் நடத்தப்படும். சாதனைப் பரீட்சை (Practical) வைகாசி மாதம் 14ந் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நடைபெறும்.

விண்ணப்பங்கள் சித்திரை மாதம் 10ந் திகதி வரையிலும் அனுப்பலாம். பிந்திய விண்ணப்பங்கள் சித்திரை மாதம் 20ந் திகதிவரையிலும் ஏற்கப்படும்.

விண்ணப்பத்திரங்களையும் வேறு விபரங்களையும் வட இலங்கைச் சங்கீத சபை (தலைவர்) வித்தியாசங்கேதம் யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வருடப் பாடவிதானமே இவ்வருடமும் பின்பற்றப்படும்.

எஸ். பி. நடராசா
காரியதரிசி.

யாழ்ப்பாணம்,
1-3-56
M. 236 9, 16-3-

### எவ்வென்றும் சிங்களமே

—0—

வத்தளைத் தொகுதி ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகர் திரு. ஏ. இரத்தினநாயகவை ஆதரிக்கும்கூட்டமொன்றில் சேர். ஜோன் கொத்தலாவல பேசும் போது ஒரு வருடம் இரண்டு வருடத்துக்கல்ல என்றென்றைக்குமே சிங்கள மொழிக்குப் பெருமை பொருந்திய இடத்தைக் கொடுக்கத் தாம் தீர்மானித்துவிட்டதாகச் சொன்னாராம்.

### ஸ்ரீ சுந்தரலிங்கத்தின் ஐக்கிய முயற்சி

தமிழ்க் கட்சிகளின் ஐக்கிய முன்னணி முயற்சி சித்தியெய்தாது சிதைந்தது பற்றி ஸ்ரீ சி. சுந்தரலிங்கம் அவர்கள் தமது வருத்தத்தை வெளியிடுகின்றார். அவ்வாறு வருந்துகின்ற அவர் மற்றொரு முறையில் ஐக்கியம் உண்டுபண்ண முற்படுகின்றாராம். எல்லாக் கட்சியினரையும் ஐக்கியப்படுத்த இன்று ஏற்பட்டுள்ள நிலைமைக்கேற்ற செயலாற்றுதல் அவருடைய பொது நோக்கமாகும்.

தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்யும் செயல்களைத் தகர்த்தல், தமிழ்மொழிக்குச் சம அந்தஸ்து மறுக்கும் எந்தச் செயலையும் எதிர்த்தல், தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் செய்வதையும்காணிச் சட்டத்தை மீறிச் செய்யும் செயல்களையும் தடுத்தல், சிறுபான்மையினரின் சனநாயக உரிமைகளை மீண்டும் உண்டாக்குதல், தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார நலன்கள் எல்லாவற்றையும் பாதுகாத்தல் என்பன அவருடைய நோக்கத்தின் விரிவாகும்.

இந்த இயக்கத்தின் ஆரம்ப அங்கத்தவராகப் பதினைந்து பிரதிநிதிகளைத் தெரிவு செய்யுமாறு தமிழ் மக்களுக்கு ஓர் வேண்டுதல் விடுத்திருக்கின்றார்.

# அடுக்கு மொழியால் ஆம்பயன் இல்லை

—0—

## மாணவருக்கு வேண்டியது எது?

மதுரை தியாகராசர் கல்லூரி விழாவிலே திரு. எஸ். அரங்கராசன் தலைமைவகித்தப்பேசும்போது,

மாணவர்களுக்கு அறிவுரை கூறுவதென்பது எளிதான செயல் அல்ல. எனினும் அவர்களுக்கு அறிவுரை கூறும்பொழுது அவர்கள் தேர்வில் நன்கு வெற்றி பெறவேண்டுமென்று கூறுவதுதான் சிறந்த அறிவுரையென்றுநான் கருதவில்லை.

இன்றைய சூழ்நிலையில் நம் நாட்டிற்குச் சாக்ரடீசைப் போன்ற மனப்பான்மை கொண்டவர்கள் தேவை, அவர் பயன்படுத்திய கொள்கையான எதையும் ஏன் எதற்கு என்று ஆராய்ந்து பார்க்கும் தன்மையை வளர்க்க வேண்டியது அவசியம். இப்படிப்பட்ட பண்பினை வளர்க்க முற்படும்பொழுது ஆழ்ந்த கருத்துக்கள் இல்லாமல் வெறும் அடுக்கு மொழியை மட்டுமே பயன்படுத்துவது சிறந்ததல்ல. அது சாக்ரட்டீசின் பண்புமாகாது. சென்ற விடமெல்லாம் அறிவு கொழுத்துவதே சாக்ரட்டீசின் பண்பாக இருந்தது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

மக்களாட்சி முறை என்பது நம் நாட்டிற்குப் புதிதல்ல. பண்டு தொட்டே மக்கள் ஆட்சிமுறை நம நாட்டில் நிலவிவந்துள்ளதற்குத் தக்க சான்றுகள் நம் நாட்டில் உள்ளன. மக்களாட்சி முறையின் நோக்கமே மக்கள் நலனுக்குப் பாடுபடுவதுதான்.

ஒவ்வொருவரும் பொது நலத்தில் ஆர்வங் கொண்டிருந்தபோதிலும் தங்கள் நலனையும் அவர்கள் பாதுகாத்துக் கொள்ளவும் மறந்துவிடக்கூடாதென்றார்.

(தமிழ் நாடு)

### அளவுக்கு மிஞ்சிய உதவியாம் தமிழருக்கு

காலியில் நடந்த கூட்டமொன்றில் ஸ்ரீ டபிள்யு. தகநாயக பேசும்போது தென்மாகாணத்துக்கு ஐந்தரை இலட்சரூபா நஷ்ட நிவாரணம் கொடுபட்டதென்றும் வடமாகாணத்துக்கு பதினைந்து இலட்சம் ரூபா கொடுக்கப்பட்டதென்றும் குறிப்பிட்டு தமிழ் மக்களுக்கு அளவுக்குமிஞ்சிய உதவி கொடுக்கப்படுகிறதென்று குறறஞ் சாட்டினாராம்.

### சம அந்தஸ்தை எதிர்த்தற்கு நியாயம்
### சேர். ஜோன் சொல்லுகிறார்

கோட்டைத் தொகுதி ஐ. தே. கட்சி அபேட்சகர் ஸ்ரீ ஆனந்த திஸ்ஸ டி. அல்விசுக்கு ஆதரவு தேடும் கூட்டமொன்றில் சேர். ஜோன் கொத்தலாவல பேசும்போது சனநாயக ஆட்சிமுறையை ஏற்படுத்திச் சாதிக் குழப்பங்களை நீக்குவது தமது நோக்கமென்றும் இப்பொழுதே சிங்களம் தனி அரச கருமமொழியாக்கப்படாவிட்டால் பின்பு எப்பொழுதுமே அப்படிச் செய்ய முடியாதென்றும் தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்துக் கொடுத்தால் நாட்டில் அளவுக்கு மிஞ்சிய தமிழ் வெளியீடுகள் பரவுதல் நிச்சயமென்றும் ஆகையினாலே சிங்களத்தைத் தனி ஆட்சி மொழி ஆக்குதற்கு இப்பொழுதே ஆதரவு கொடுக்கும்படியும் கேட்டாராம்.

வெளியிலுள்ளவர்கள்

# என்ன நினைக்கிறார்கள்

எம் நாட்டில் இப்பொழுது நடக்கும் தேர்தலைப் பற்றியும் தேர்தலின் நோக்கத்தைப்பற்றியும் கையாளப்படும் தேர்தல் முறைகளைப்பற்றியும் வெளிநாடுகளிலுள்ளவர்கள் என்ன நினைக்கிறார்களென்பது பற்றி அறிய ஒரு சந்தர்ப்பம் வாய்த்துள்ளது. மான்செஸ்ரர் கார்டியன் என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் எழுதும்போது, மொழிப் பிரசினையே தேர்தற் கொள்கையாகக்கொள்ளப்பட்டபோதிலும் தேர்தலுடன் இலங்கையில் மொழிப் பிரச்னை தீரப்போவதில்லை என்றும்வலசமாரியேதேர்தற்கூட்டங்களில்முதலிடம் பெறுகின்றதென்றும்மொழி என்பதே தேர்தற்கொள்கை என்று சொல்லப்பட்டபோதிலும் அது உண்மையில் அரசாங்க சேவையிலிருந்து தமிழ்மக்களை அகற்றுதற்குக் கையாளப்படும் வழியுமாகின்றது என்றும், ஸ்ரீ தாயாசிங்கின் அம்மையார் என்பாரின் கூற்றாய் அப்பத்திரிகையில் வெளிவந்திருப்பது இங்குள்ள நிலைமையை உள்ளவாறுணரச் செய்தற்கு உதவுகின்றதென்று கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவு வளர்ச்சி

## ஆனந்தம் அடைவதற்கு வழி

அறிவு என்றால் என்ன? இதற்குப் பதில் சொல்வது கடினம்தான். ஆதிகாலத்திலே மனிதரும் மிருகங்களும் ஒரேவிதமான வாழ்க்கையை நடத்தி வந்ததாகச் சரித்திர நூல்கள் கூறும். மனிதன் தனது உணவிற்காக மிருகங்களைக் கொன்று தின்றான். மிருகங்கள் தங்கள் உணவிற்காக தமக்குக் கீழ்ப்பட்ட மிருகங்களையும் மனிதரையும் கொன்று தின்றன. மனிதருக்கு ஒரு விசேட சக்தி கடவுளால் கொடுக்கப்பட்டிருந்தது. அதுதான் சிந்திக்கும் சக்தி. மனிதன் சிந்தித்தான். அவ்வாறு சிந்திக்கத் தொடங்கிய அன்று அவன் மிருகங்களில் இருந்து வேறுபடத் தொடங்கினான். ஒரு மிருகம் தன் உணவுக்காக வேறொரு மிருகத்தைத் தாக்குவதைக் கண்டான். சிலவேளைகளில் அவ்வாறு தாக்கப்பட்ட மிருகம் எதிர்த்து யுத்தம் செய்து இரையாகாமல் தப்பிய விந்தையையும் பார்த்தான். மிருகங்களின் உடலமைப்பிலும் தன் உடலமைப்பிலும் உள்ள வேறுபாட்டைச் சிந்தனை சக்தி பெற்ற மனிதன் ஆராய்ந்து பார்த்தான். ஒரு மிருகம் தாக்கும்போது தன்னால் எதிர்த்து நிற்க முடியாது என்பதைக் கண்டான். இதற்கு என்ன வழி என்பதை அவன் சிந்தித்தான். அதன்பயனாக அவன் தனக்குப் பாதுகாப்பான இடத்தை உண்டாக்கினான். ஆயுதங்களைக் கண்டு பிடித்தான். இவ்வாறு அறிவின் வளர்ச்சியைப்பற்றிச் சரித்திரம் கூறுகிறது. நமக்கு இதிலிருந்து தெரிவதென்னவென்றால் தமக்கு வரும் தீங்கைவர விடாமல் அறிவு காக்கும் என்பதாகும்.

அறிவு வளர்ச்சிக்கு நாம் ஆரம்பத்தில் கூறிய சிந்தனை சக்தியே துணையாக நின்றிருக்கிறது. பல புதிய அரிய விடயங்களைக் கண்டு பிடித்தற்கு சிந்தனை சக்தியே உதவியிருக்கிறது. ஒரு பழம் நிலத்தில் விழுவதைக் கண்ட நியூட்டன் என்பவரின் மனம் சிந்தித்தது. அந்தச் சிந்தனையில் பல அரியபெரிய உண்மைகளை அவர் கண்டுபிடித்து உலகத்திற்குக்கொடுத்தார். தேனீர் கொதிக்கும்போது அதன் மூடி நீராவியால் தள்ளப்படும் சம்பவமானது தூண்டிய சிந்தனையே நீராவி யந்திரங்களை உண்டாக்கியது. தற்காலத்திலே வானொலி பேசும்படம் முதலிய விஞ்ஞான சாதனைகளும் அறிவு வளர்ச்சிக்கு உதவுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

அறிவு வரவர ஆழமாக வளர்ந்து கொண்டு போகின்றது. அதிகாரத்தை அடைவதற்கும் பொருளை அடைவதற்கும் சுகபோக வாழ்க்கை வாழ்வதற்கும் என்ன சாதனங்கள் தேவை என்பதிலேயே மேல்நாட்டாரின் ஆராய்ச்சி சென்றுகொண்டிருந்தது. அதன் பலனாகப் பல அரிய விஞ்ஞான சாதனங்களை அவர்களின் அறிவு வளர்ச்சி தரக்கூடியதாக இருந்தது.

மனிதன் ஏன் சிந்தனை சக்தியைப் பெற்றான் அதனால் அவனுக்கு என்ன

ஸ்ரீ வ. குகசர்மா

பிரயோசனம்? என்பவைகளைப்பற்றி நன்றாக ஆராய்ந்து ஒரு சிறந்தமுடிபைக் கண்டவர்கள் கீழ்நாட்டினர்தான். சுவர்க்க பூமி என்று ஒன்று இருக்கிறது. அது புண்ணியம் செய்தோர் இருந்து இன்பங்களை அனுபவிக்கும் இடம் எனக் கருதப்பெறுகிறது. ஆங்கிலக் கவிவாணராகிய மில்ரன் என்னும் புலவரும் சுவர்க்க நீக்கம் என்னும் நூலில் சுவர்க்கத்தைப்பற்றியும் பாவம் செய்யும் மக்கள் சென்றடையும் நரகத்தைப்பற்றியும் சொல்லியிருக்கிறார். ஆரம்பகணிதம் நுண்மையான அறிவைக் கொடுக்கிறது. தத்துவம் ஆழமான நுண்ணிய நற்குணமுள்ள அறிவைக் கொடுக்கிறது. தர்க்க சாத்திரம் பாஷாலங்காரத்தையும் வாதாடும் திறமையையும் கொடுக்கிறது என ஆங்கில விற்பன்னராகிய பிரான்சிஸ் பேகன் கூறியிருக்கிறார்.

அறிவு ஆனந்தத்தைக் கொடுப்பது. விஞ்ஞான அறிவு நோயை மாற்றவும் மனிதர்களின் குறைவை நீக்கி அவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் உதவும் பொழுது ஆனந்தமாகிறது. இறைவன் பூரண அறிவுடையவர். அவர் ஆனந்த ரூபமுடையவராகி எம்முள்ளத்தில வீற்றிருக்கிறார். "அறிவாகியானந்த மயமா யென்று மழியாது நிலையாகி" என்று தாயுமானவர் பாடுகிறார். கல்வி மாத்திரம் அறிவைக் கொடுக்கமாட்டாது எனத் தாயுமானவர் நம்புகிறார். ஏன்? கல்வி அறிவு இருப்பதால தர்க்கங்கள் பேசுகின்றன எல்லாரையும் மருட்டுகின்ற பெரியன் எனக்காட்டகின்றேன். இது வித்தை. இதனால் "கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் கற்றுமறிவிலாத வென் கர்மத்தை யென் சொல்வேன்" என்று ஆரம்பத்தில் கூறி இறுதியில் "வெல்லாம லெவரையும் மருட்டிவிட வகைவந்த வித்தைபென் முத்தி தருமோ" என்று கேட்கிறார். மனிதருக்கு சக்தி கொடுக்கப்பட்டது தாழ்வதற்காக அல்ல வாழ்வதற்காக. அகங்கார வளர்ச்சிக்கல்ல — அடக்கத்திற்கு. பகை செலுத்துவதற்கல்ல அன்பு செலுத்துவதற்கு துன்பத்திற்கல்ல, இன்பத்திற்கு கொலைசெய்வதற்கல்ல மற்றவர்களையும் வாழச் செய்வதற்கு. இவ்வாறான அறிவின் தன்மையைக் கடைப்பிடித்தால் மக்கள் வாழ்க்கையில் ஆனந்தம் அடைவர் என நம்பலாம்.

# தேர்தல் அதிகாரிக்கு பண்டாரநாயகவின் கடிதம்

### உலகழிவு வரை சிங்களமேயாம்

நுவரெலியாவில் நடந்த தேர்தற் கூட்டமொன்றில் சேர். ஜோன் கொத்தலாவலை பேசும்போது சூரிய சந்திரர்கள் நிலைத்திருக்கும் வரையில் இலங்கையின் அரச கருமமொழி சிங்களம் ஒன்றுமேயாகும் என்று வாக்குறுதி கூறினாராம்

### இந்திய பிரதிநிதிகள் சபைத்தலைவர்

ஸ்ரீ எம். ஆனந்தசயனம் ஐயங்கார் அவர்கள் இந்திய பிரதிநிதிகள் சபைத்தலைவராய் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பெற்றனர். இவர் ஸ்ரீ மவ்லங்கார் காலத்தில் உபதலைவராகக் கடமையாற்றியுள்ளார்.

முதன் மந்திரி சேர். ஜோன் கொத்தலாவலவின் தேர்தலை முதல்நாளிலும் தமது தேர்தலைக் கடைசி நாளிலும் நடக்கச் செய்தல் பாரபட்சமானதாகும் என்றும் எந்த ஒரு அரசியற் கட்சிக்கும் வசதியுண்டாக்கும் தன்மையான ஒழுங்கைச் செய்யக்கூடாதென்றும் ஸ்ரீ எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக தேர்தல் ஆலுவல் அதிகாரிக்கு எழுதினாராம். அப்படி எழுதியது முறையீனம் என்றும் தமக்கு நடைமுறைக் குறிப்பு எவரும் கூறமுடியாதென்றும் தேர்தல் துறையில் கடமையாற்றுவோரைப் பெறும் வசதி, தேர்தல் மேற்பார்வை அதிகாரி எத்தனை இடங்களைப் பார்த்தல் சாத்தியமாகும் என்பவற்றிலேயே தமது தீர்மானம்தங்கியிருக்கும் என்றும் தேர்தல் அலுவல் அதிகாரி ஸ்ரீ ஏ. அருட்பிரகாசம் தமது கருத்தைத் தெரிவித்திருக்கின்றாராம்.

### ஒற்றுமையின் அவசியம்

சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி உயர்தர பெண்மாணவர் விடுதித் திறப்பு விழாவிலே கல்லூரில் தலைமை ஆசிரியர் ஸ்ரீ கே. ஏ. செல்லையா அவர்கள் பேசும்போது இலங்கை மக்களின் முன்னேற்றம் இந்நாட்டில்வசிக்கும் வேறுபட்ட சமூகத்தினரின் ஒற்றுமையைப் பொறுத்ததாகும். எங்கள் எதிர்காலம் இருள்மயமானதாயிருப்பதை நாங்கள் இன்று காண்கின்றோம் என்று கூறினர்.

### சங்கீத கதாப்பிரசங்கம்

முத்தமிழ்மணி பிரமஸ்ரீ வி. எஸ். எஸ். மணி ஐயர் அவர்கள் 9-1-56ல் பதுளை சைவபரிபாலன சங்க ஆதரவில் 'காரைக்கால் அம்மையார்' சரித்திரம் பற்றி கதாப்பிரசங்கம் செய்தார்.

### கொழும்பு நகரசபைத் தலைவர்

ஸ்ரீ வி. ஏ. சுகததாச கொழும்பு நகரசபைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார். வைத்திய கலாநிதி குமாரன் இரத்தினத்துக்கு 14 வாக்குகளும் ஸ்ரீ சுகததாசவுக்கு 16 வாக்குகளும் கொடுக்கப்பட்டன. திரு ஏ. டி இராமநாயக வாக்களிக்கவில்லை.


## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

மானிப்பாய் வே. க. இராசலிங்கம் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி எடுபடாதிருக்கும் கீழ் விபரிக்கப்படும் நகைகளை (31-3-56) மன்மத வருடம் பங்குனி மாதம் 18-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

| நம் | திகதி | ரூபா சதம் | நகைவிபரம் |
|---|---|---|---|
| 4007 | 8-3-1953 | 12 00 | மோதிரம் |
| 4944 | 17 3- ,, | 100 00 | பவுண் 2 |
| 5262 | 16-6- ,, | 60 00 | புரோச்சு 1 |
| 5290 | 22 6- ,, | 20 00 | மோதிரம் 1 |
| 5366 | 19-7 ,, | 30 00 | சங்கிலி 1 |
| 5596 | 17-9 ,, | 15 00 | மோதிரம் 1 |
| 5598 | 18-9 ,, | 40 00 | மோதிரம் 1 சிமிக்கி சோடி 1 |
| 5660 | 5 10 ,, | 20 00 | கைச்சங்கிலி 1 |
| 5981 | 9-1-1954 | 75 00 | காப்பு 1 |
| 5987 | 10 1- ,, | [illegible]0 00 | பென்டன் 1 |
| 5993 | 17-1- ,, | 85 00 | பஞ்சாயுதம் சங்கிலி 1 மோதிரம் 2 |
| 6042 | 19-1- ,, | 25 00 | மோதிரம் 1 |
| 60[illegible]2 | 24-1- ,, | 72 00 | சங்கிலி 1 |
| 6078 | 30-1- ,, | 15 00 | குளந்தைக்காப்பு சோடி 1 |
| 6177 | 1-3- ,, | 20 00 | மோதிரம் 1 |
| 6198 | 6-3- ,, | 20 00 | குளந்தைக்காப்பு சோடி 1 |
| 6356 | 19-4- ,, | 35 00 | சங்கிலி 1 |
| 6465 | 12-5- ,, | 1 0 00 | காப்பு சோடி 1 மோதிரம் 2 |
| 6616 | 25-6- ,, | 10 00 | மோதிரம் 1 |
| 6659 | 7-7- ,, | 125 00 | பென்டன் சங்கிலி 1 மோதி.1 |
| 6664 | 10-7- ,, | 80 00 | தாலிக்கொடி 1 |
| 6680 | 20-7- ,, | 10 00 | தூக்கம் சோடி 1 |
| 6726 | 1-8- ,, | 10 00 | ஈ.விஜயநாதன தோடு2சுரை1 |
| 6739 | 4-8- ,, | 50 00 | குளந்தைக் காப்பு சோடி 1 தூக்கம் சோடி 1 தாலி 1 |
| 6744 | 5-8- ,, | 30 00 | மோதிரம் 1 |
| 6788 | 19-8- ,, | 140 00 | காப்பு சோடி 2 |
| 6790 | 21-8- ,, | 10 00 | தோடு சோடி 1 |
| 6913 | 13-9- ,, | 80 00 | காப்பு சோடி 1 |
| 6959 | 27-9- ,, | 40 00 | புரோச்சு 1 |
| 6987 | 2-10- ,, | 100 00 | கலனுடன் சங்கிலி 1 |
| 6997 | 4.10- ,, | 150 00 | காப்பு சோடி 2 |
| 7076 | 24-10- ,, | 20 00 | மோதிரம் 1 |
| 7152 | 10-11. ,, | 130 00 | பதக்கத்துடன் அட்டியல் 1 |
| 7199 | 20-11- ,, | 125 00 | காப்பு சோடி 1 |
| 7248 | 27-11- ,, | 100 00 | குள. கா. சோ. 1, நீலக்கல் மோதிரம் 1, புரோச்சு 1. |
| 7258 | 28-11- ,, | 60 00 | மோதிரம் 1 |
| 7315 | 11-12- ,, | 75 00 | மோதிரம் 1 |
| 7354 | 18.12- ,, | 40 00 | குளந்தைக் காப்பு சோடி 1 |
| 7356 | 18-12- ,, | 22 00 | தாலி 1 |
| 7388 | 25 12- ,, | 60 00 | ½ பவுன் 2 |
| 7390 | 25-12. ,, | 70 00 | குளந்தைக் காப்பு சோடி 1 தாலி 1, மோதிரம் 1. |

7-3 56

S. Pasupathy Chettiar.
Auctioneer.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயர்கள் நெஞ்சம்

## கீரிமலைத் தீர்த்தக் கரைக்கு
# மின்சார வசதி

"கையிலே வெண்ணெய் வைத்துக்கொண்டு — நெய் தேடியலைந்ததாக ஒரு உருசிகரமான கதை உண்டு. எங்கள் நாட்டிலே புண்ணிய தீர்த்தம் என்று பெரும் புகழுடன் மிளிரும் கீரிமலைத் தீர்த்தக் கரையையும், காங்கேசன்துறை (சமீபமாக) மின்சார நிலையத்தையும் நினைத்துப் பார்க்கும்போது — நெய்க்கு அலைந்து திரிந்த மேற்படி கதைதான் ஞாபகத்துக்கு வருகிறது. வருத்தம் ஏற்படுகிறது.

நைக்த எட்டாத்தன்மை!

காங்கேசன் துறையில் மின்சார நிலையம் அமைந்திருப்பதை எண்ணி யாரும் பெருமைப்படாமல் இருக்க முடியாது. ஆனல் மேற்படி நிலையத்திலிருந்து இரண்டு மைல்தூரங்கூட இல்லாத — கீரிமலைத் தீர்த்தக்கரைக்கு — கேணிக்கு — அந்தத் தெருவீதிக்கு — மின்சார விநியோகம் இன்னமும் அமையவில்லையே என்பதை எண்ணும்போது ஆச்சரியம் ஏற்படுகின்றது. யாழ்நகரின் எல்லையென மதிக்கப்படும் அரியாலைச் சந்தி—(கண்டி வீதி) வரையிலே மின்சார விநியோகம் நடைபெறவும், காங்கேசன்துறை மின்சார நிலையத்துக்கு அணிமையிலேயுள்ள —கீரிமலைத் தீர்த்தக் கரைக்கு மின்சார விநியோகம் இன்னமும் கிடைக்கவில்லை என்ருல்—'கையிலேவெண்ணெய் வைத்துக்கொண்டு நெய்தேடி அலைவதை' ஒக்குமன்ரோ? கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்று ஏங்குகிருர்கள் அந்தத் தீர்த்தக்கரைக்குச் செல்லும் பொதுமக்கள்.

மகா சிவராத்திரி, ஆடி அமாவாசை, மாமாங்கத் தீர்த்தம், இன்னபிற விசேடகாலங்களிலெல்லாம் நாட்டின் நாலு பக்கங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்து இராப்பொழுதைத் தீர்த்தக்கரையிலேயே கழித்து, அதிகாலையிலே தீர்த்தமாடிச் செல்லும் வழக்கம் இன்றும் இருந்துவருவதை எவரும் காணலாம். தினமும் மக்கள் எந்நேரத்திலும் வந்து தீர்த்தமாடிச் செல்லும் வழக்கம் இன்றும் இருந்து வருவதை எவரும் காணலாம். மேலும் தினமும் மக்கள் எந்நேரத்திலும் வந்து தீர்த்தமாடிப் போகும் ஓர் புனித இடமாகவும் மேற்படி தீர்த்தக் கரை விளங்குகின்றது. இப்படிப்பட்ட விசேடம் வாய்ந்த தலத்துக்கு மின்சார விளக்கு வசதி செய்து கொடுக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும், இந்த அரிய முயற்சியில் தெல்லிப்பழைக்கிராமச்சங்கம், காங்கேசன்றுறை பட்டினசபை: பண்டத்தரிப்புக் கிராமச்சங்கம் முதலியவற்றுடன்—தமிழுக்கும்—சைவத்துக்கும் தக்க தொண்டாற்றுதல் தங்கடனெனக்கொண்டு பணிபுரியும் சங்கங்கள் சபைகள், பொதுநலக் கழகங்கள்—சைவத் தொண்டாற்றும் அபிமானிகள்—முன்வந்து உழைக்க வேண்டும்,

இங்ஙனம்
க்ா. இரகுநாதன்
சாவகச்சேரி? சாயன்மார்கட்டு,
13—3—56

## அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் வண் - மேற்கு யாழ்ப்பாண ஐக்கியலாப நிதியில் S. கனகசபை அவர்களிடம் 1-1-49 முதல் 30-12-51 முடிய மீளாத நகைகள் யாவும் 21-4-56 காலை 10 மணிக்குமேல் மேற்படி கடையில் என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

V. Pasupathy Chettiar
Auctioneer.

M. 251 16 3, 23 3.

# சிவராத்திரி மகோற்சவம்

மேற்படி மகோற்சவம் தெல்லிப்பழை பாலர் ஞானோதயசபையின் ஆதரவில், காசி விநாயகராலயத்தில் மாசிமீ 27ம்நாள் (10-3-56) சனிக்கிழமை பிற்பகல், திரு. சு. சிவவாகீசர் B A அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.

மாலை 6 மணியளவில் ஸ்ரீ காசி விநாயகப் பெருமானுக்கு விசேட அபிஷேகமும் ஆராதனைகளும் நடைபெற்றன. அதன்மேல் சபைத் தலைவர் பிரம்மஸ்ரீ மு. சிவகடாக்ஷக் குருக்கள் அவர்களால் கூட்டுப் பிரார்த்தனை நடத்தப்பட்டதும் கூட்டம் ஆரம்பமாயது.

திரு. M. S. சிதம்பரப்பிள்ளை அவர்கள் பேசுகையில் சிவராத்திரி சைவமக்களுக்கு ஓர் புனித தினமெனவும், சிவன் பிரம விஷ்ணுக்களுடைய ஆணவ இருளை நீக்கி நல்வழி காட்டிய இத்தினத்தில் நாமும் அகங்காரங்களை ஒழித்துத் தூய்மையாக வழிபாடு செய்ய வேண்டுமென்றும், அடியார்கள் அருளிய அருட்பாக்களை அன்புடன் ஓதினல் ஆண்டவன் அருள் கிடைக்குமென்றும், அங்ஙனம் தேவார திருவாசகங்களை மனனஞ் செய்து ஓதுவதற்கு ஓர் சிறந்த ஸ்தாபனம் இப் பாலர் ஞானோதய சபையேயென்றும், இச்சபை தளர்வுருது நடைபெறுவதற்குப் பெற்ருர்கள் தம் பிள்ளைகளை தவருது அனுப்ப வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள்.

இரவு 11 மணியளவில் கூட்டம் நிறைவுற்றதும் திருவிழா நடைபெற்றது. நான்கு யாமமும் பூசைகள் நடைபெற்றன.

## இலங்கை ஐக்கியத்துக்கு மூன்று அரசு

பேராதனை சர்வகலாசாலையில் திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள் இலங்கையின் எதிர்காலம் என்னும் பொருள்பற்றிப் பேசும்போது இலங்கையில் ஐக்கியம் ஏற்படுத்துவதற்கு மூன்று இராச்சியங்கள் அமைப்பதே தகுந்த வழியாகும் என்று கூறினர். அவருடைய கருத்தின்படி மத்திய இலங்கையின் பௌத்த இராச்சியம் தென் இலங்கையில் உருகுணு இராச்சியம் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ் இராச்சியம் அமைதல் நன்றெனக் கூறப்பட்டிருக்கின்றது.

## ஹெந்தலை தொழுநோய் வைத்தியசாலை

முருகன் ஆலய கும்பாபிஷேகம்

ஹெந்தலை தொழுநோய் வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் முருகன கோயிலில் ஸ்ரீ பால சுப்பிரமணிய மூர்த்தி பிரதிட்டையும் கும்பாபிஷேகமும் இம்மாதம் 18ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறுகிறது. மாலை 5 மணிக்கு திருஉலாக்காட்சி' இதை முன்னிட்டு அந்த வைத்தியசாலையில் எல்லாச்சமயநோயாளருக்கும் அன்னதானம் நடைபெறஏற்பாடாகியுள்ளது கொழும்பு விவேகானந்தசபையின் ஆதரவில் இவ்வைபவங்கள் நடைபெறுகின்றன.

-நிருபர்.

## பிழை என்று ஏற்கிருர் பிரெஞ்சு மந்திரி

இந்திய பத்திரிகை நிருபர்கள் காஷ்மீர் ஏன்தென் கிழக்கு ஆசிய ஒப்பந்தச் சபையில் பேசப்பட்டது என்று ஸ்ரீ பீனே பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரியைக் கேட்டார்கள். இவ்விஷயம் ஐக்கிய நாட்டுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதால் இச்சபையின் கரும எல்லைக்குள் இது வரவில்லைதான் என்று அவர் மறுமொழி கூறினர்.

—O—

## பொய் வாக்குச் சீட்டுக்குத் தண்டனை

ஒருவருடைய வாக்குச் சீட்டை மற்ருெருவர் மாறிப்போட்டால் அவருக்கு ஆயிரம் ரூபா குற்றம் அல்லது பன்னிரண்டு மாசக் கடூழியச் சிறை அல்லது இரண்டுமாயுமிருக்குமென்று தேர்தல் அதிகாரி எச்சரிக்கை விடுத்திருக்கின்ருர்.

## அறிவித்தல்

பாலாவி தென்மேற்கு ரோட்டுப் போடுவதற்கு 24-3-56 முற்பகல் 10 மணிவரை கச்சாய் கிராமச்சங்கத் தலைவரால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

23-3-56 முற்பகல் 11.30 மணிவரைக்கும் கச்சாய் கிராமச்சங்கக் கந்தோரில் ரூபா 10 கட்டி கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம்.

கை. செல்லையா,
கிராமச்சங்கத் தலைவர்,
கச்சாய்.

கச்சாய் கிராமச்சங்கக் கந்தோர்,
கொடிகாமம் 14-3-56
M. 252. 16-3

## எகிப்திய பிரித்தானிய வேறுபாடு

பிரித்தானிய வெளிநாட்டு மந்திரி ஸ்ரீ செல்வின் உலோயிட், பண்டித நேருவுடன் தெல்லிமா நகரில் நடத்திய பேச்சுவார்த்தைகளில் எகிப்திய பிரித்தானிய வேறுபாடுகள்பற்றிய பேச்சு இடம் பெற்றதாம். அவ்வேறுபாடுகளை நீக்கும் முறையில் இந்தியா இடைபடுவதைப் பிரித்தானியா விரும்புகின்றதெனக் கூறப்படுகின்றது.

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இவ்வாரப் பலன்கள், 18—3—56 —— 24—3—56

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

இன்னமும் சிறிது காலத்துக்கு உமது தேகசுகம் நல்லாயிருக்கமாட்டாது. உம்முடைய புது முயற்சிகளில் கவனமாயிருக்கவும். பண நிலைமைகள் திருந்த வேண்டும் ஆனல் வேலை கூடுதலாயிருக்கும்

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

குடும்ப சமாதானம் உமக்குச் சிறிது மிருக்கமாட்டாது. நண்பர் அதிக உதவியாயிருப்பர். நடு வாரத்தில் கந்தோரில் சில குழப்பங்களுக்கு இடமுண்டு. வசைமொழி பரப்புவோரைப்பற்றிக் கவனமா யிருக்கவும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

எதிரிகளுக்கு இந்தவாரம் அழிவு நிச்சயம் சிறு கருமங்கள்பற்றி நிலைகுலையவேண்டாம், அவை சிறு சச்சரவுகளாய் நீங்கிவிடும். உமது நன்மதிப்புப் பெருகும் பண நெருக்கடியும் குறையும்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

சிறு சுகவீனங்கள் தவிர இந்த வாரம் அதிக சித்தியுள்ளதாயிருக்கும், புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**சிங்கராசி மகம், பூரம். உத்திரம, 1ம் பாதம்.**

ஒரு தளம்பமான வாரம். சித்தி பெறுவதற்கு நீர் மிக முயன்றுழைக்கவேண்டும், மனச் சமாதானமிருக்கமாட்டாது. இரகசியப் பகைவரால் இடைஞ்சல்களுக்கு இடமுண்டு.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம.**

குடும்ப நிலைமைகள் திருந்தவேண்டும். உம்முடைய கருமங்கள் பலவற்றில் நெருக்கடி குறையும் தனலாபமும் புகழும் நிச்சயம. ஆனல் தேகசுகம் இன்னமும் சிக்கலாகவேயிருக்கும்.

**துலாம்சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

இந்தவாரம் நீர் சண்டை தொடுக்க முந்துவீர், முதல் இரு நாட்களும் உம்மைச் சிறிது நிலைகுலைக்கும். வார மிகுதி மிக நல்லதாகும், பகைவர் அழிவுக்கு இடமுண்டு.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

கருமங்களைத் தீர்மானிப்பதில் இந்தவாரம் வருத்தப்படுவீர் தேகசுகம் அதிகம் திருத்தியாயிராது. இரகசியப் பகைவரால் இடைஞ்சல்களுக்கிடமுண்டு. சுகவீனங்களுக்குமிடமுண்டு. திங்கள் பிற்பகல செவ்வாய் புதன் எல்லாவற்றிலும் பழுதானவை.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்**

முன் அரைவாரம் புது முயற்சிகளுக்கு நல்லதாகும். ஆனல புதன் பிற்பகல், வியாழன், வெள்ளி தொந்தரவாயிருக்கும், கடைசிநாள் திரும்பவும் நன்ருகும்.

**மகராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

கடைசி இரு நாட்கள் தவிர இந்தவாரம் உத்தியோக கருமங்களுக்கு மிக நல்லதாயிருக்கும். உம்மோடு போட்டியிடுவோரை வெல்லுவீர். தனலாபமும் நிச்சயம்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

ஒரு நல்ல வாரம். நெருக்கடி குறையும் உம்முடைய முயற்சிகள் பலவற்றில் நீர் சித்தியடைவீர். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

தேகசுகம் சிக்கலாகவேயிருக்கும் எதுவோ ஒன்றைப்பற்றி இந்த வாரம் முழுதும் நீர் நிலைகுலைந்து நிற்பீர். புது முயற்சிகள் பின்போடப் படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 448
டானியல் பொன்னையா சிவரத்தினம் மகள் முத்துமலர், உடுவில் மேற்கு. வழக்காளி

எதிர்

1. நாகன் சின்னத்தம்பியும் பெண்
2. சினனப்பிள்ளை
3 சின்னத்தம்பி ஆறுமுகமும் பெண்
4. செல்லம்மா—எல்லாரும பள்ளிக் கூடத்து ஒழுங்கை, நாவற்குழி எதிராளிகள்.

யாழ்ப்பாணம் பெரிடகோட்டின் MB/448ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஐந்து துண்டுக்காணிகள் 1956 ஆ வைகாசி மீ 5உ சனிக்கிழமை பிற்பகல் 3மணி தொடக்கம் அந்த அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

யாட்பாணம் — நாவற்குளியில் 'சீதாவிலாபிட்டி'' என்னும் காணி கி இ. 4½. இதில் தெற்குப் புறமாக கி. இ. 1½ பிற நீங்கலாக, வடக்கு புறம் கி. இ. 3. எல்லை: கிழக்கு, சரவணமுத்து அருணாசலத்தின் ஆதனம்,

வடக்கு. நாகலிங்கம் பெண் தங்கம்மாவின் ஆதனம். மேற்கு அருணாசல பண்டாரியின ஆதனம் தெற்கு சுப்பிரமணியம் பெண் சின்னம்மாவின் ஆதனம். இவை அடங்கிலும மேற்குபுறமாக இருக்கும் புளியடி சீர் என்னும் காணியிலிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும், வழி வாய்க்கால் பாவிப்பு உருத்தும்.

(2) மேற்படி இறை கிரிஆயுவா வயலும் திலலையடவயலும் என்னும் காணி செ. கி 4. எல்லை: கிழக்கு, சின்னத்தம்பி ஆறுமுகமும் மறுவும். கிணறும் அதின தாரவை நிலமும் வடக்கு: றெயில் ரோட்டு. மேற்கும், தெற்கும் ஒழுங்கை. இதற்குள் அடங்கிய காணியும். வான்பயிர் செய்பயிர் வீடும். கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும, வழிவாய்க்கால் பாவிப்பு உருத்தும்.

(3. மேற்படி இறை நாவற்குளியில் சீமாசியர் வளவு சித்தவிலாபிட்டி தென்னந்தோப்பும் சோமாசு வளவு என்னும காணி கி இ, 7. எல்லை: கிழக்கு, ஒழுங்கை. வடக்கு, பண்டாரி வெள்ளையப்பருக்கும மறுபேருக்கு முடைய ஆதனங்கள். மேற்கு, வல்லிபுரம் செல்வத்துரைக்கும் பங்காளருக்கு முடைய ஆதனம். தெற்கு, நாமலிங்கம் பெண் நாகம்மாவும் நாகன சின்னத்தம்பியும் பெண் சின்னப்பிள்ளையும் இவை அடங்கலிலும் சொரியலாக 7/10 பங்கும் புதிதாய் கட்டியவீடும். மேற்சொல்லிய 3-ம் 4-ம் எதிரிகளுக்கு உரியது. கிணற்றில் தண்ணீர் பங்கும்.

(4) நாவற்குளியில் கத்தைவாய்க்கால் வளவு என்னும் காணி கி. இ. 24 குளி 7½. எல்லை: கிழக்கு. வாரி கனகனும மறுபேரும். வடக்கு, மாப்பாணி துரையப்பாவும் மறுவும். மேற்கு, கயிதடி கயட்டாசிட்டி கந்தசுவாமி கோவிலுக்குரிய ஆதனம். தெற்கு, வல்லிபுரம் அருணாசலமும் மறுவும். இவை அடங்கிலும் சொரியலாக அரைவாசிப் பங்கும், பனைகளும்மேற்கெல்லைக்கு ஊடாக இந்தக் காணிக்கு வரும் பாதை பாவிப்பு உருத்தும்.

(5) நாவற்குழியில் பெரியான் காட்டு வளவு என்னும் காணி கி இ 5¼ எல்லை: கிழக்கு, ஒழுங்கை. வடக்கு, சின்னத்தம்பி சிதம்பரி, மேற்கு, குமரமுத்து சிங்காரசாவின் ஒற்றி ஆதனம். தெற்கு, குத்தன் கைம்பெண் செல்லி. இவை அடங்கிலும்.

வ. அ. துரையப்பா
கொமிஷனர்.

யாட்பாணம்,
10-3-56
M. 248. 16-3 (ரூ. 200)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கோண்டாவில்
கார்த்திகேசு சுப்பையா
—வழக்காளி

இல: M B 203.

எதிராக

1 கோண்டாவில்
,, மார்க்கண்டு சின்னத்துரை
2 ,, மார்க்கண்டு பொன்னையா
3 ,, மார்க்கண்டு செல்லையா
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B, 203ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக காணிகள் 1956 ஆ ஏப்ரல் மீ 19 உ வியாழக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிகளின் விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்கோவிற்பற்று, கோண்டாவில் இறை "கிளுவைக் கட்டையடி நொச்சிக்காடு கள்ளியடி'' நிலப் பரப்பு 2ம் கிணற்றுப் பங்கும், வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு முருகேசு தருமலிங்கத்துக்கும் மற்றும் பங்காளிகளுக்குமுரிய ஆதனம். மேற்கு சின்னப்பு கணபதிக்குரியஆதனம். தெற்கு இராமுதம்புவுடைய ஆதனமும் அத்துடன் ரோட்டுக்குச் செல்வதற்கு வடக்கெல்லைக் காணிக்கூடாகஉரிமையும்.

2 ஷை கோண்டாவில் இறை "விழாத்தியடி'' நிலப்பரப்பு 4; அதில் செரியலாக அரைவாசிப் பங்கும், பனைகளும், எல்லை கிழக்கு கையொழுங்கை. வடக்கு நவனி சிவபுண்ணியத்திற்குரிய ஆதனம். மேற்கு இத்தினி பெண் செல்லத்திற்குரிய ஆதனம். தெற்கு சின்னத்தம்பி ஆறுப்பிள்ளைக்குரிய ஆதனம்.

செ. பாண்டித்துரை
கொமிஷனர்
M 249 16-3 ( ரூ. 200)

## கூட்ட அறிவித்தல்

தொல்புரம் சிதம்பர அம்பலவாணசுவாமி மாணமுதலியார் மடத் தர்மசபைப் பொதுக் கூட்டம் நிகழும் மன்மத வருடம் பங்குனி மாதம் 12ந் தேதி (25-3-56) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு தொல்புரம் மாண முதலியார் மடத்தில நடைபெறும. அத்தருணம் அங்கத்தவர் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்,

நிகழ்ச்சி நிரல்

1 அறிக்கை வாசித்தல்
2 வரவுசெலவுக் கணக்கு வாசித்தல்
3 புதிய தர்ம பரிபாலனசபை அங்கத்தவர்களைத் தெரிதல்.

ந மகாதேவன்
கௌரவ காரியதரிசி

தொல்புரம், 9-3-56
M. 246 16-3. 23-3

## ஞானப்பிரகாச முனிவர் திருநாள்

நாள் : பங்குனி மீ கூ உ. (22-3-56) வியாழக் கிழமை.

இடம்: யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

6-30 — 8 கடவுளாராதனை, தமிழ்மறையோதல்
ஸ்ரீமத் மு. சுப்பையாதேசிகர் அவர்கள்

8 — 9 விரிவுரை
"ஞானப்பிரகாசமுனிவர்''
திரு. பொ. அப்புக்குட்டி அவர்கள்.

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக,

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்.

சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம், 14 3 56
(ரூ. 150)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்றிக்கோட்டில் மட்டுவில்தெற்கு சின்னத்தம்பி போம்பலம் கைம்பெண் நாகம்மா வழக்காளி

எதிர்

இல 851

ஷை யூர் கதிரவேலு பொன்னுத்துரை. இவர் காலஞ்சென்ற மட்டுவில் விசுவனாதர் சின்னத்தம்பியின் ஆஸ்திகளின் பிரதிநிதாக நியமிக்கப்பட்டவர்.

எதிராளி.

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டால் 851ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப் பிரகாரம் கீழ்காணுமாதனங்கள் 1956ம் ஆ சித்திரைமீ 4ந் திகதி புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் அவ்வக்காணிகட்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: ரூபா697/50ம் 25 6-54 தொடக்கம் 13-12-54 வரையும் ரூபா 350/— 12 வீதவட்டியும் கூடி வரும் தொகைக்கு 14-12-54 தொடக்கம் இறக்கும் வரைக்கும் 5% வீத வட்டியு கோட்டுச்செலவு ரூபா 219-80

ஆதனவிபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோயிற்பற்று மட்டுவில் தெற்கு இறை நெணியன் வயல் செ. பர 8. எட்டுக் கெல்லை கிழக்கு விசுவனாதர் சின்னத்தம்பியினதனம். வடக்கு சிதம்பரப்பிள்ளை கந்தையாவினதனம் மேற்கு கதிகாயர் சின்னத்தம்பியினதனம், தெற்கு நடை வரம்பு. பதிவு F. 68/29.

(2) ஷை மட்டுவில்தெற்கு இறை வேரகசேணி வளவு நீ பர 6. இதில தெற்குப் பக்கமாக நீ பர 3 மூன்றுக் கெல்லை கிழக்கு ரோட்டு வடக்கும் மேற்கும் விசுவனாதர் சின்னத்தம்பியினதனம். தெறகு ரோட்டு பதிவு F 229/97.

மு. ந மார்க்கண்டு
கொமிஷனர்,

சாவகச்சேரி,
1956ம் ஆ பங்குனிமீ 16 உ
M 253 16-3 (ரூ 50)

## பொதுவுடைமை அபேட்சகர்களுக்கு கத்தோலிக்க எதிர்ப்பு

கத்தோலிக்கவாக்காளர் தங்கள் வாக்குரிமையை உபயோகப்படுத்த வேண்டுமென்றும் பொதுவுடைமையினருக்கு வாக்களிக்கக் கூடாதென்றும் கத்தோலிக்க சமய அதிகாரபீடத்திலிருந்து ஆணை பிறந்திருக்கின்றதாம். ஆணையை மீறுவோர் சமய உரிமையையே இழக்கநேரிடுமாம்.

## அமெரிக்க நிறக் கொள்கைநிலை

சர்வகலாசாலைகளி லிருந்து கறுப்புநிறப்பிள்ளைகளை நீக்ககூடாது என்று உயர்நீதிமன்றம் தீர்த்த தீர்ப்பை எதிர்ப்பதற்கு அமெரிக்க தேசிய மகாநாட்டுஅங்கத்தவர் தொண்ணூற்றுறு பேர்தாம் செய்யக்கூடியவை எல்லாம் செய்ய இருப்பதாக வாக்குறுதி கொடுத்தார்களாம்.

## யாழ்ப்பாணம் ஐக்கியஸ்ரீபந்தி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

6,63,3,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியசோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
மனேஜர்.

Std. 14 20-11-46—20-11-49.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450 ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 16 3-56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 10681.

1 காரம்பன் சந்தியாப்பிள்ளை பிரான்சிஸ் சவிரிமுத்துவும் பெண்
2 ஷை அன்னம்மாவும்.
வழக்காளிகள்.

எதிராக

(மாணித்தவர்)
1 காரம்பன் வேலு கணபதிப்பிள்ளையும் பெண்
2 ஷை பொன்னம்மாவும்.

2-ம எதிரி தானாகவும் காலஞ்சென்ற தனது புருஷன் 1-ம் எதிரியின் ஆதனத்துக்குத் தத்துவகாரியாகவும். எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 10681-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி. பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1956 ஆ சித்திரை மீ 7உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 1552-00ம் இதில் ரூபா 1000 க்கு 11-1-54தொடக்கம் 15-11-55 வரைக்கும் வருட மொன்றுக்கு 100 க்கு 12 வீத வட்டியும், அதன் பின் முழுத்தொகைக்கும் 15-11-55 தொடக்கம் இறக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 271 10

காணி விபரம்

ஊர்காவற்றுறை கோவிற்பற்று காரம்பன் இறை சாந்தை செற்பரப்பு ஏழு (7)ம கிணறும், வீட்டில் வடக்குப்பக்கமாக அரைவாசியும் குசினியும் செய்பயிர் வான்பயிர்களும், எல்லை: கிழக்கு, நடராசா பெண் பூமணியும் பொன்னையா பெண் கண்மணியும், வடக்கு, சின்னத்தம்பி பொன்னையா மேற்கும் தெற்கும் தம்பிமுத்து செல்லையாவும் பெண் நாகம்மாவும், இதில குறித்த கிணற்றில் தெற்கு, மேற்கு எல்லைக் காணிகளுக்குரிய பங்கும் தாரவை வழிவாய்க்கால் பாவிப்புரித்துடற நீங்கலாக மிகுதியடங்கலும் இன்னும் இதன் தெற்கெல்லைக் காணியில் கிழக்கெல்லை யருகாக தெற்கே யிருக்கும ரோட்டுக்குப் போக்குவரவு பண்ணும் நாலுமுழ அகலங்கொண்ட வழிப்பாவிப்புரித்தும்.

ஆ ச கந்தையா
கொம்மிஷனர்.

காரைநகர், 20-2-56
M. 247 16-3 (ரூ. 50)

## புத்தசமயமில்லாமல் சிங்கள சாதி இல்லையாம்!

நிக்கவெறற்றியாத் தொகுதிஅபேட்சகர் ஸ்ரீ எம். தென்னக்கோனுக்கு ஆதரவு தேடும் கூட்டமொன்றில் ஸ்ரீ எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக பேசும்போது புத்தசமயம் இல்லாவிட்டால் சிங்கள சாதியே இல்லாமல் போய் விடும் என்று கூறித்தமது கட்சிக்கு ஆதரவு கேட்டாராம்.

## நுவரெலியா நகரசபைக் கருமமொழி

நுவரெலியா நகரசபைக் கருமங்கள் சிங்களத்திலேயே நடக்க வேண்டும் என்று நகரசபை தீர்மானித்திருக்கின்றது. சபைக் கூட்டங்களில் தமிழிலோ ஆங்கிலத்திலோபேசவிரும்புவோர் பேசலாம் என்ற ஒழுங்கு ஒன்று அத்துடன் அமைக்கப்பட் டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org